INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY | DIGITAL SKILLS for LIFE

இணையவழித் தளங்களில் தொடர்புகொள்ளுதல்

# வீடியோ அரங்க உரையாடல்




இதற்கான ஆதரவு

DIGITAL FOR LIFE

PLAY IT FORWARD

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| முகப்புரை | 2 |
| சைபர் பாதுகாப்பு உதவிக்குறிப்புகள் | 3 |
| வீடியோ அரங்க உரையாடலைப் பற்றி | 4 |
| வெவ்வேறு வீடியோ கூட்ட அரங்க உரையாடல் செயலிகளுக்கிடையிலுள்ள பொதுவான அம்சங்கள் | 5 |
| வீடியோ கூட்ட அரங்க உரையாடல் செயலியைப் பயன்படுத்துவதற்கான பொதுவான படிநிலைகள் | 7 |
| ஒரு Zoom கணக்கிற்காகப் பதிவுசெய் | 13 |
| அமைப்புகளை மேலாண்மை செய் | 16 |
| ஒரு கூட்டத்தில் இணைந்துகொள்ள உள்நுழை | 17 |
| வீடியோ பின்னணி, காட்சி அமைப்புகளைச் சீரமை | 19 |
| கூட்டத்தின்போது இடைவினையாற்றுதல் | 20 |
| கூட்டத்தின்போது தனிநபருடனும் குழுப் பங்கேற்பாளர்களுடனும் அரட்டையடித்தல் | 21 |
| அரட்டையில் பிற்சேர்க்கையைப் பகிர் | 22 |
| திரையைப் பகிர் | 24 |
| கூட்டத்தை முடி | 26 |

# முகப்புரை

வாழ்க்கைக்கான மின்னிலக்கத் திறன்கள் (DSL) கையேடு என்பது பின்வருவனவற்றை உள்ளடக்கிய சிறு புத்தகங்களின் தொகுதியாகும்:

- படிப்படியான வழிமுறைகள் மற்றும்
- விரைவான உதவிக் குறிப்புகள்

இணையத்தில் நம்பிக்கையுடனும் பாதுகாப்பாகவும் நீங்கள் உலாவுவாதற்கு உதவுவதற்காகக் கொடுக்கப்பட்டுள்ளன.


இது அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான மின்னிலக்கத் திறன்களைப் பற்றி மேலும் அறிந்துகொள்வதில் ஆர்வமாக இருக்கிற, ஏதேனும் மின்னிலக்க அனுபவம் உள்ள அல்லது அனுபவம் இல்லாத அனைவருக்கும் பயனுள்ளதாக இருக்கும்.

வரைபடத்தில் காட்டியுள்ளபடி இன்றியமையாத திறன்கள் 5 திறமைப் பிரிவுகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

**இணைய வழி தொடர்பாடல் திறனில் பெற்றுள்ள கற்றல் விளைவு:**
என்னுடைய தொடர்பு நபர்களுடன் அல்லது நிறுவனத்துடன் நான் தொடர்பாடும் திறமையைப் பெற்றுள்ளேன்.

DSL


### இணையவழித் தளங்களில் பாதுகாப்பாக, விவேகமாகக் கனிவாக இருத்தல்



இணைய அச்சுறுத்தல்களுக்கு எதிராக, பாதுகாப்பாக இருங்கள்; தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்; இணையத்தில் நேர்மறையாக இருக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்.

### தகவல்களை இணையவழித் தளங்களில் ஆராய்தல்

இணையத்தில் தகவல்களைத் தேடவும், பார்க்கவும் மற்றும் மீட்டெடுக்கவும்.



### இணையவழித் தளங்களில் தொடர்பு கொள்ளுதல்

இணையத்தில் மற்றவர்களுடன் இணையவும்.



### இணையவழிப் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளுதல்

இணையத்தில் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளவும்.



### அறிவார்ந்த சாதனங்களை நிறுவி, பயன்படுத்துதல்

உங்கள் மொபைல் சாதனத்தின் அடிப்படை வன்பொருள் மற்றும் மென்பொருள் செயல்பாடுகளை அமைத்து இயக்கவும்.





நீங்கள் கற்றல் விளைவுகளைப் பெற உதவிட, இந்த வழிகாட்டிப் புத்தகம் வெவ்வேறு அரங்க உரையாடல் தளங்களை எடுத்துக்காட்டாக ஆக்கி பிறருடன் தொடர்பாடும் அவற்றின் பொதுவான படிநிலைகளைச் செயல்விளக்கிக் காட்டியுள்ளது.

இந்த வழிகாட்டி பொதுவான மென்பொருள் சின்னங்கள் மற்றும் மொபைல் சாதன அமைப்புகளை அடிப்படையாகக் கொண்டது. சில அம்சங்கள் மற்றும் பயனர் இடைமுகம் வெவ்வேறு கைப்பேசிகளில் வேறுபடக்கூடும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

# சைபர் பாதுகாப்பு உதவிக்குறிப்புகள்


வீடியோ அரங்க உரையாடல் செயலிகளைப் பயன்படுத்தும்போது பாதுகாப்பாக இருப்பதற்கு, தயவுசெய்து பின்வருவனவற்றைப் பேணவும்:




அரட்டைச் செயற்பாட்டில் அறியாத மூலங்களிலிருந்து வருகின்ற எந்த சரிபார்க்கப்படாத இணைப்புகள் அல்லது பிற்சேர்க்கைகளைத் திறக்கக் கூடாது.




எவருடனும் தனிநபர் அல்லது நிதிசார்ந்த விவரங்கள், கடவுச்சொற்கள் அல்லது ஒரே முறை அளிக்கப்படும் கடவுச்சொல் **(OTP)** ஆகியவற்றைப் பகிரவே கூடாது.




அறியப்பட்டுள்ள பாதுகாப்புப் பலவீன நிலைமைகளிலிருந்து உங்கள் சாதனங்களைப் பாதுகாப்பதற்குப் புதுப்பித்தல்கள் கிடைக்கின்றனவா எனச் சோதித்து உங்கள் செயலிகளை முறையாகப் புதுப்பித்துக்கொள்ளவும்.




செயலிகளை அதிகாரப்பூர்வ மூலங்களிலிருந்து பதிவிறக்கவும்.


# வீடியோ அரங்க உரையாடலைப் பற்றி

Zoom, Google Meet, Skype மற்றும் MS Teams போன்ற வீடியோ அரங்க உரையாடல் செயலிகள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் உடலியல்ரீதியாக ஓரிடத்தில் இருக்கவேண்டிய தேவையில்லாமலே நேருக்கு நேர் பார்த்துப் பேசுகின்றவாறு இணைய வழி கூட்டங்களை இணயத்தளத்தில் மெய் நேரத்தில் நடத்த அனுமதிக்கின்றன.


## செயலியைக் கற்றுக்கொள்வதற்கான முன் தேவைப்பாடுகள்

### கற்பவர் இவ்வாறிருக்க வேண்டும்:


- இயங்குகின்ற நிலையிலுள்ள காமெராவைக் கொண்டுள்ள மொபைல் சாதனம்.
- செல்லுலார் பிணையம் அல்லது Wi-Fi உடன் இணைக்கப்பெற்றுள்ள மொபைல் சாதனம்.
- ஒரு செயலியை எவ்வாறு பதிவிறக்குவது என அறிந்திருத்தல்.
- செயல்நிலையிலுள்ள மின்னஞ்சல் முகவரியைப் பெற்றிருத்தல்.




Zoom





MS Teams






Google Meet

# வெவ்வேறு வீடியோ கூட்ட அரங்க உரையாடல் செயலிகளிலுள்ள பொதுவான அம்சங்கள்




| Zoom | | MS Teams | | Google Meet | | |
|---|---|---|---|---|---|---|
| Unmute | Mute | Unmute | Mute | Unmute | Mute | மைக் ஒலியை அணைத்தலை நீக்குதல் வழி நீங்கள் பேச இயலலாம்.<br>மைக் ஒலியை அணை எனவே நீங்கள் எழுப்பும் சத்தம் பிறருக்குக் கேட்காது. |
| Show Video | Hide Video | Show Video | Hide Video | Show Video | Hide Video | பங்கேற்பாளர்கள் உங்களைப் பார்க்க இயலும்படி வீடியோவைக் காட்டு.<br>பங்கேற்பாளர்கள் உங்களைப் பார்க்க இயலாதபடி வீடியோவை மறை. |
| Share Screen | | Share Screen | | Share Screen | | உங்கள் பங்கேற்பாளர்கள் காணவேண்டுமென்று நீங்கள் விரும்பும் உள்ளடக்கத்தைத் திரையில் பகிர். |
| Chat | | Chat | | Chat | | "அரட்டை" பொத்தானைத் தட்டி பங்கேற்பாளர்களுக்குச் செய்தியை அனுப்பு. |


# வெவ்வேறு வீடியோ கூட்ட அரங்க உரையாடல் செயலிகளிலுள்ள பொதுவான அம்சங்கள்

| Zoom | MS Teams | Google Meet | |
|---|---|---|---|
| <br>Participants | <br>Participants | <br>Participants | பங்கேற்பாளர்களைக் காட்டு |
| <br>End Call | <br>End Call | <br>End Call | அழைப்பிலிருந்து வெளியேறுதல். |
| <br>Reactions | <br>Reactions | <br>Reactions | கூட்டத்தின்போது பதில்வினை/எதிர்வினை ஆற்ற "உயர்த்து" பொத்தானைத் தட்டி, கையை உயர்த்தவும் அல்லது "எதிர்வினையாற்று" பொத்தானைத் தட்டி, உங்கள் எமோஜிகளைத் தேர்ந்தெடுக்கவும். |


# வடியோ கூட்ட அரங்க உரையாடல் செயலியைப் பயன்படுத்த பொதுவான படிகள்

**1** ஒரு கூட்டத்தில் இணைய, கூட்ட அழைப்பின் விவரங்களை உள்ளிடவும் அல்லது கூட்ட இணைப்பின் மீது தட்டி, பிறகு "Join" பொத்தான் மீது தட்டவும்.

## Zoom





## Google Meet




# வடியோ கூட்ட அரங்க உரையாடல் செயலியைப் பயன்படுத்த பொதுவான படிகள்

**2** கூட்டத்தில், நீங்கள் பேசுவதைப் பிறர் கேட்கக்கூடாது என விரும்பினால் "ஒலியை அணை" பொத்தானைத் தட்டலாம் அல்லது நீங்கள் பேச விரும்பினால் "ஒலியை அணைத்தலை நீக்கு" பொத்தானைத் தட்டவும்.

## Zoom





## Google Meet




# வடியோ கூட்ட அரங்க உரையாடல் செயலியைப் பயன்படுத்த பொதுவான படிகள்

**3** கூட்டத்தில், பிற பங்கேற்பாளர்கள் உங்களைக் காண்பதை விரும்பினால் "Start Video" பொத்தானைத் தட்டலாம் அல்லது பிற பங்கேற்பாளர்கள் உங்களைக் காண்பதை விரும்பாவிட்டால் வீடியோவை மறைக்கலாம்.

### Zoom





### Google Meet




# வடியோ கூட்ட அரங்க உரையாடல் செயலியைப் பயன்படுத்த பொதுவான படிகள்

**4** கூட்டத்தில், பொருத்தமான எமோஜிகளைத் தேர்ந்தெடுப்பதன் வழி நீங்கள் எதிர்வினையைக் கொடுக்கலாம்.

## Zoom





## Google Meet




# வடியோ கூட்ட அரங்க உரையாடல் செயலியைப் பயன்படுத்த பொதுவான படிகள்

**5** “Everyone” அல்லது குறிப்பிட்ட பங்கேற்பாளருடன் நீங்கள் அரட்டை செயற்பாட்டைப் பயன்படுத்தி அரட்டை செய்யலாம்.

## Zoom





## Google Meet




# வடியோ கூட்ட அரங்க உரையாடல் செயலியைப் பயன்படுத்த பொதுவான படிகள்

**6** நீங்கள் அழைப்பிலிருந்து வெளியேற விரும்பினால் "End" அல்லது "வெளியேறு" பொத்தானைத் தட்டவும்.

**Zoom**




**Google Meet**




# ஒரு Zoom கணக்கிற்காகப் பதிவுசெய்


**1** உங்கள் முகப்புத் திரை மீது Zoom செயலியைத் தொடங்கவும்

Apple App Store அல்லது Google Play Store இலிருந்து **"Zoom"** செயலியைப் பதிவிறக்கி அதைத் தொடங்கவும்.


**2** Sign Up தேர்ந்தெடு




**3** நீங்கள் பிறந்த ஆண்டை உள்ளிட்டு Continue பொத்தானைத் தேர்ந்தெடுக்கவும்





**4** உங்கள் மின்னஞ்சல் முகவரியை உள்ளிட்டு பின்பு Continue பொத்தானைத் தேர்ந்தெடுக்கவும். உங்கள் Google, Apple அல்லது Facebook கணக்கைப் பயன்படுத்தியும் நீங்கள் பதிவு செய்யலாம்




# ஒரு Zoom கணக்கிற்காகப் பதிவுசெய்


**5** மின்னஞ்சலிலிருந்து உங்கள் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட்ட 6 இலக்க குறியீட்டை உள்ளிடவும்




**6** இது 6 இலக்க குறியீட்டுடன் நீங்கள் பெறும் மின்னஞ்சலின் எடுத்துக்காட்டு ஆகும்





**7** ஒரு வலிமையான கடவுச்சொல்லை உள்ளிட்டு பின்பு Continue பொத்தானைத் தேர்ந்தெடுக்கவும்




# Zoom கணக்கைப் பதிவுசெய்


**8** இப்போது உங்கள் சுயவிவரத்தைத் தனிப்பட்டதாக அமைக்கவும் அல்லது தவிர்க்க Not Now பொத்தானைத் தேர்ந்தெடுக்கவும்




**9** கட்டணமுள்ள செயலியை முயன்று பார்க்க Check It Out பொத்தானைத் தேர்ந்தெடுக்கவும் அல்லது தவிர்ப்பதற்கு Not Now பொத்தானைத் தேர்ந்தெடுக்கவும்





**10** கணக்கை அமைத்தல் நிறைவடைந்தது. Zoom ஐப் பயன்படுத்துவதற்குத் Get started பொத்தானைத் தேர்ந்தெடுக்கவும்.




# அமைப்புகளை மேலாண்மை செய்


**1** More பொத்தானைத் தேர்ந்தெடுக்கவும்




**3** Meetings தேர்ந்தெடுக்கவும்





**3** நீங்கள் விரும்பும் அமைப்புகளை அமைக்கவும்




# ஒரு கூட்டத்தில் இணைந்துகொள்ள உள்நுழை


**1** ஒரு கூட்டத்தில் இணைய Sign In தேர்ந்தெடுக்கவும்




**2** Join பொத்தானைத் தேர்ந்தெடுக்கவும்





**3** கூட்ட அழைப்பின் விவரங்களை உள்ளிடவும் பின்பு Join பொத்தானைத் தேர்ந்தெடுக்கவும்




# ஒரு கூட்டத்தில் இணைந்துகொள்ள உள்நுழை

**4** Wi-Fi or Cellular Data தேர்ந்தெடுக்கவும்




**5** வீடியோ, மைக் அமைப்புகளைச் சீரமை




## மைக்கை அணைத்து வைக்க அல்லது அணைத்து வைத்தலை நீக்குவதற்கு மைக் சின்னத்தின் மீது தட்டவும்


- ஒலியை அணை – பங்கேற்பாளர்கள் நீங்கள் பேசுவதைக் கேட்க முடியாது
- ஒலியை அணைத்தலை நீக்கு – பங்கேற்பாளர்கள் நீங்கள் பேசுவதைக் கேட்க முடியும்

## வீடியோவைக் காட்டுவதற்கு அல்லது மறைப்பதற்கு வீடியோ சின்னத்தின் மீது தட்டவும்


- வீடியோவைக் காட்டு – பங்கேற்பாளர்கள் உங்களைப் பார்க்க முடியும்
- வீடியோவை மறை – பங்கேற்பாளர்கள் உங்களைப் பார்க்க முடியாது

# வீடியோ பின்னணி, காட்சி அமைப்புகளைச் சீரமை


1 More பொத்தானைத் தேர்ந்தெடுக்கவும்




2 Background & Effects தேர்ந்தெடுக்கவும்





3 நீங்கள் விரும்பும் பின்னணி அல்லது காட்சி அமைப்புகளைத் தேர்ந்தெடுக்கவும்




# கூட்டத்தின்போது இடைவினையாற்றுதல்

1 பங்கேற்பாளர்களுடன் இடைவினையாற்ற Reactions பொத்தானைத் தேர்ந்தெடுக்கவும்





2 நீங்கள் விரும்பும் எமோஜியைத் தேர்ந்தெடுக்கவும்




# கூட்டத்தின்போது தனிநபருடனும் குழுப் பங்கேற்பாளர்களுடனும் அரட்டையடித்தல்


1. Chat ஐத் தேர்ந்தெடுக்கவும்




2. Everyone அனைவருடனும் அரட்டையடிப்பதைத் தேர்ந்தெடுக்கவும். உரையை உள்ளிட்டு பின்பு அனுப்பு பொத்தானைத் தட்டவும்





3. பங்கேற்பாளர்களுடன் அரட்டையடிப்பதற்கு அவர்களின் பெயர்களைத் தேர்ந்தெடுத்துத் தட்டவும். உரையை உள்ளிட்டு பின்பு அனுப்பு பொத்தானைத் தட்டவும்




# அரட்டையில் பிற்சேர்க்கையைப் பகிர்


**1** உங்கள் பிற்சேர்க்கையின் பெறுநரைத் தேர்ந்தெடுத்து பின்பு + சின்னத்தைத் தட்டவும்




**2** ஒரு Photo அல்லது File ஐத் தேர்ந்தெடு





**3** புகைப்பட பிற்சேர்க்கைகளுக்காக, உங்கள் தேர்வுகளைச் செய்ய புகைப்படங்களை அணுக அனுமதிக்கவும்




# அரட்டையில் பிற்சேர்க்கையைப் பகிர்

**4** கோப்பு பிற்சேர்க்கைகளுக்காக, File பொத்தானை மீண்டும் தேர்ந்தெடுக்கவும்





**5** உங்கள் தெரிவைச் செய்து பின்பு அனுப்பு பொத்தானைத் தட்டவும்




# திரையைப் பகிர்


1 பிற பங்கேற்பாளர்கள் உங்கள் திரையைக் காண அனுமதிப்பதற்குப் Share பொத்தானைத் தேர்ந்தெடுக்கவும்




2 பிற உருப்படிகளைப் பகிர திரையைத் தேர்ந்தெடுக்கவும்





3 எடுத்துக்காட்டாக, பிற பங்கேற்பாளர்களுடன் பகிர ஒரு படத்தைத் தேர்ந்தெடுக்கலாம்




# திரையைப் பகிர்

4 திரையைப் பகிர்தல்





5 உங்கள் திரையைப் பகிர்தலை நிறுத்துவதற்குப் Stop Share பொத்தானைத் தேர்ந்தெடுக்கவும்.



# கூட்டத்தை முடி

கூட்டத்திலிருந்து வெளியேற End பொத்தானைத் தேர்ந்தெடுக்கவும்



## கூடுதல் தகவலுக்கு மற்றும் உங்கள் அருகிலுள்ள சிங்கப்பூர் மின்னிலக்கச் சமூக நடுவத்தைக் கண்டறிய:

**IMDA தொடர்பு மையம்**


ஹாட்லைன்: +65 6377 3800
மின்னஞ்சல்:
info@imda.gov.sg
இணையத்தளம்:
digitalforlife.gov.sg



© 2024 தகவல்தொடர்பு ஊடக மேம்பாட்டு ஆணையம். அனைத்து உரிமைகளும் பாதுகாகாக்கப்பட்டவை.
இந்த ஆதரத்தின் எந்தப் பகுதியையும் IMDA இன் வெளிப்படையான ஒப்புதல் இல்லாமல் பயன்படுத்தவோ நகலெடுக்கவோ கூடாது.
இந்த வழிகாட்டியுடன் தொடர்புடைய ஆணையங்களின் பதிப்புரிமை பாதுகாப்பிற்கு உட்பட்டதாக இருக்கலாம்.
இவற்றுள் பின்வருபவை அடங்கும்: ஸ்லைடுகள், படங்கள், ஒலி மற்றும் காணொளி.
காப்புரிமை பெற்ற பொருட்களை அங்கீகாரம் இல்லாமல் வைத்திருப்பது, நகல் எடுப்பது, விநியோகம் செய்வது அல்லது மாற்றியமைப்பது கண்டிப்பாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.


*இந்த மூலவளம் Zoom Video Communications, Inc. நிறுவனத்தை மேற்கோளுரைக்கிறது.*